සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
MINISTRY OF PRIMARY INDUSTRIES AND SOCIAL EMPOWERMENT

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/SOR/EB/SDO/2019 ………… ඔබේ අංකය / உமது இல / Your No ………… දිනය / திகதி / Date: 2019.08.5

சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்களுக்கும்

**<u>சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையினை நடாத்துதல் - 2019</u>**

மேற்படி விடயம் தொடர்பில் எனது சம இலக்கமும் 2019/07/15ம் திகதியிடப்பட்டதுமான கடிதத்திற்கு மேலதிகமாக

மேற்படி கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட "முகாமைத்துவ உதவியாளர் - தொழில் நுட்பமல்லாத வகுதி 2 சேவைத் தொகுதியின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 1/2/3 வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை – 2019" என்ற தலைப்புடனான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மேலதிகமாக விளக்கப்படுத்துவது, (பாடத்திட்டமும் பிற குறித்த விடயங்களும்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களை விளக்கமளிக்குமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

எஸ்.ஈ.ஆர்.ரீ.எம்.எஸ்.பீ. பண்டார
பணிப்பாளர் தலைமையதிபதி

Translated By: M.M.M. Jawhar (Translator)

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் (நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | Hot Line:0112-885582 | Hot Line: 011- 28877 |

# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

## முகாமைத்துவ உதவியாளர்- தொழில்நுட்பமல்லாத வகுதி 2 சேவைத் தொகுதியின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 1/2/3/வது வினைத்திறன் தடைதாண்டல் போட்டிப்பரீட்சை - 2019.

மேற்படி விடயம் தொடர்பாக எனது 2019.07.25ஆம் திகதியிடப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குறியவாறு மேலதிக விளக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. சகல பரீட்சார்த்திகளும் தங்களுக்குறிய விடயங்கள் தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறியத்தருகின்றேன்.

1. குறித்த பரீட்சை அறிவித்தலில் 2வது மற்றும் 3வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் கீழ் உள்ளவாராகும்.

**அ). Iவது வினைத்திறன் பரீட்சை**

- இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கீழ் பணியில் ஈடுபட்டிருக்கும் போது Iவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கு தோற்றாத உத்தியோகத்தர்கள்.
- இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கீழ் பணியாற்றும் போது Iவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கு தோன்றி அப்பரீட்சையில் தேறாத உத்தியோகத்தர்கள்.
- 2013ஆம் ஆண்டிலிருந்து இது வரையில் புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

**ஆ). 2வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

- குறித்த அறிவித்தலின் தினமாகும் போது தனது பதவியில் IIவது தரத்தில் உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.
- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினை ஆரம்பிக்கும் சட்டத்தின் 44(உ) III பிரிவின் கீழ் புதிய ஊழியர்களாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

**இ) 3வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

- தனது பதவியில் Iம் தரத்தில் பதவியுயர்வு பெற்று (05) ஐந்து வருடங்களுக்குள் ஓய்வு பெறாத சகல உத்தியோகத்தர்களும்

2. **தொடர்ந்தும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பினை வழங்கி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பணியில் இணைவதற்கு விருப்பத்தினைத் தெரிவித்துள்ள உத்தியோகத்தர்கள்.**

- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினை தாபிப்பதற்குறிய சட்டத்தின் 44(உ) IV பிரிவின் கீழ் தொடர்ந்தும் ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பணியில் இணைவதற்கு விருப்பத்தினைத் தெரிவித்த உத்தியோகத்தர்களின் பொருட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் உள்ளீர்ப்பதற்குறியதான பணியாளர் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

- அதற்குறிய பதவியுயர்த்தும் முறைகளின் பொருட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குகளுக்கமைய பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளது.

- ஆகையினால் சட்டத்தின் 44(உ) IV பிரிவின் கீழ் (ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பினை வழங்கிக் கொண்டிருக்கின்ற) உள்ள உத்தியோகத்தர்கள் இச்சந்தர்ப்பத்தில் பரீட்சைக்கு முகம் கொடுப்பது அவசியமற்றதாகும்.

3. **பரீட்சை தொடர்பான விபரங்கள்.**

குறிப்பிட்ட அறிவித்தலின் 10வது பந்தியின் 2.b இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் கீழுள்ள பிரகாரம் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

10.2.b. இரண்டாவது (02) வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கான பாடத்திட்டம்.

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| தாபன விதிக் கோவை மற்றும் நிதிப்பிரமாணம் | தாபன விதிக் கோவையின் I வது பரிவின் XXII, XXIII, XXV, XXX, XXXII, மற்றும் XXXVI என்ற இலக்கங்களையுடைய பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள வியங்கள் தொடர்பில் உள்ள அறிவினை பரீட்சித்தல் தாபன விதிக் கோவையின் IIவது பிரிவின் XLVII என்ற இலக்கத்தில் அடங்கியுள்ள ஒழுங்குகள் தொடர்பான அறிவினை பரீட்சித்தல்.<br><br>நிதிப் பிரமாண இலக்கம் 102 முதல் 104 வரை அத்துடன் 135 முதல் 139 வரை |
| வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி சட்டம் மற்றும் சமூக அபிவிருத்திக்குறிய அரசாங்கத்தின் கொள்கைகள், வாழ்வாதார அபிவிருத்திக்குறிய புதிய போக்குகள் | வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி சட்டத்தின் ஒழுங்குகள், சமுதாய அடிப்படை அமைப்பு, சமுதாய அடிப்படை வங்கி, சந்தைப்படுத்தல் பிரிவுகளின் பணிப் பொறுப்புகள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்யுடன் இணைந்ததான பிற அரசாங்க நிறுவனங்களின் பணிப்பொறுப்புக்கள்<br><br>இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு வாழ்வாதாரப் பிரிவின் பங்களிப்பு, வாழ்வாதார அபிவிருத்தியின் முக்கியத்துவம், நிகழ்காலத்திலுள்ள உருவாகின்ற பிரச்சினைகள். |

எஸ்.ஈ.ஆர்.எம்.எஸ்.பீ. பண்டார
பணிப்பாளர் தலைமையதிபதி